6th August 1966]

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : எற்கனவே கனம் அங்கத்தினர்களே ஒன்றிரண்டு தனிப்பட்ட பிரச்னைகளைக் கவனத்திற்குக் கொண்டு வந்தார்கள். அதன்மீது நடவடிக்கைகளை எடுத்து அவைகள் முடிவு செய்யப்பட்டிருக்கின்றன என்பதற்காக கனம் அங்கத்தினர் சர்க்காரைப் பாராட்டுவார் என்று நினைக்கிறேன். குறிப்பிட்ட மாவட்டங்களில் எல்லாவிதப் பிரச்னைகளும் செட்டில் செய்யப்பட்டுவிட்டன. ஒரு சில ஜில்லாக்களில் என்ன காரணத்தினாலோ டிலே இருக்கிறது; அக்கவுன்டன்ட்-ஜெனரல் ப்ரீ-ஆடிட்டுக்குக் கூட கட்டுப்படாமல் சீக்கிரம் செட்டில் செய்ய வேண்டுமென்று சொல்லியிருக்கிறோம். குறிப்பிட்ட தேதிக்குள் செய்ய வேண்டுமென்று சொல்லுவதை விட சீக்கிரமாகக் கால தாமதம் இல்லாமல் செய்யவேண்டுமென்று தாக்கீது அனுப்ப முயற்சிக்கிறோம்.

திரு. செ. மாதவன் : சர்க்கார் உத்தரவிட்டிருக்கிறது. ஆனால் கீழே உள்ள அதிகாரிகள் அறிக்கை அனுப்புவதிலே தாமதம் ஏற்படுகிறது, அதனால் காலதாமதம் ஏற்படுகிறது என்று கனம் அமைச்சர் அவர்கள் விளக்கம் தெரிவித்தார்கள். கலெக்டர் அவர்கள்தான் உத்தரவிடுகிறார்கள், ஒவ்வொரு பஞ்சாயத்திற்கும் யார் யார் போக வேண்டுமென்று. சாதாரணமாக ஆசிரியர்கள் தான் அனுப்பப்படுகிறார்கள். ஆகவே கலெக்டர் உடனே பயணப் படியை நிர்ணயம் செய்து கொடுக்கவேண்டியதுதானே? அதிலே காலதாமதம் ஏற்படுவதற்கு என்ன காரணம் என்பதை அரசாங்கம் பரிசீலனை செய்ததா?

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : என்னென்ன காரணங்கள் என்பது பற்றி தகவல் இல்லை. கீழ்மட்ட அளவிலே காலதாமதத்திற்கு என்னென்ன காரணங்கள் என்பதை தகவல் தெரிந்து சொல்கிறேன்.

ஓய்வுபெற்ற ஆசிரியர்கள் சங்கம், மதுரை

181 கேள்வி.—திரு. து. ப. அழகமுத்து : கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) மதுரை ஓய்வுபெற்ற ஆசிரியர்கள் சங்கம் 8-4-1965-ல் கனம் முதல் அமைச்சர் அவர்களிடம் விண்ணப்பம் ஏதேனும் சமர்ப்பித்துள்ளதா ?

(இ) ஆமெனில், அதன் விவரங்கள் யாவை ?

(உ) அவைகளின்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் யாவை ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) to (c) : A memorandum containing a request for the sanction of a minimum pension of Rs. 20 per mensem to teachers and other requests was submitted to the Chief Minister. A minimum pension of Rs. 20 has since been sanctioned with effect from April 1966 payable in May 1966. The other requests are not admissible.

[6th August 1966

புலவர் கா. கோவிந்தன் : ஆசிரியர்களுக்கு ரூபாய் 20-க்குக் குறைந்த அளவில் பென்ஷன் இருக்கக்கூடாது, குறைந்தது ரூபாய் 20 அளவுக்கு பென்ஷன் கொடுக்கவேண்டும் என்பதை அரசாங்கம் கொள்கையாக ஏற்றுக்கொண்டிருக்கிறது. அவர்கள் இப்பொழுதே பென்ஷன் வாங்கிக்கொண்டிருக்கிறார்கள். இப்பொழுது ரூபாய் 20-க்கும் குறைந்த பென்ஷன் வாங்குகிறவர்களுக்கு ரூபாய் 20 பென்ஷன் கொடுக்கப்படும் என்று அகௌண்டெண்டு-ஜெனரல் சர்டிபிகேட் கொடுத்துவிட்டால், அவர்கள் அந்தமாதிரி பென்ஷன் வாங்க முடியும். இப்படிச் செய்தால் இது எளிதிலே முடிந்து விடும். இதற்கு அரசாங்கம் வழிவகை செய்வார்களா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : கனம் அங்கத்தினர் கூறுவது எனக்கு சரியாகப் புரியவில்லை. அவர்களுக்கு குறைந்தபட்சமாக பென்ஷன் ரூபாய் 20 இருக்கவேண்டும், முதியோர்களுக்கு உதவி ரூபாய் 20 கொடுக்கிறோம், அந்த அடிப்படையில் ரூபாய் 5, 6, 10 பென்ஷன் வாங்கிக்கொண்டிருப்பவர்களுக்கும் ரூபாய் 20-க்கு பென்ஷன் உயர்த்திக் கொடுக்கப்பட்டிருக்கிறது. அது ஏப்ரல் மாதத்திலிருந்து கொடுக்கப்பட்டு வரும்.

கல்வித்துறை அதிகாரிகளின் சம்பளம்

* 182 **கேள்வி.—திரு. எம். எஸ். செல்வராஜன் :** கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப் பாரா—

ஜில்லா கல்வி அதிகாரிகள், ஸ்பெஷல் கல்வி அதிகாரிகள் டிவிஷனல் இன்ஸ்பெக்டர்கள், பெண்கள் பள்ளிகளின் இன்ஸ்பெக்ட் ரஸ்கள், சீனியர், ஜூனியர் இன்ஸ்பெக்டர்கள் இவர்களுக்குக் கூடுதல் சம்பளமும், பிரயாணப் படியும் கொடுப்பதற்குத் திட்ட மிருக்கிறதா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இல்லை.

திரு. எம். எஸ். செல்வராஜன் : பாடசாலைகளிலே பரீட்சாதிகாரி களாக இருக்கக்கூடியவர்கள் பெறுகிற சம்பளம் அங்கே பணி செய்கிற தலைமை ஆசிரியர்கள், நீண்ட காலமாக பணிபுரிந்து வருகிறவர்களுடைய சம்பளத்தைவிட குறைந்த அளவுக்கு இருக் கின்ற நிலைமை இருக்கிறதா ? அத்தகைய பரீட்சாதிகாரிகளுடைய விசேஷ நிலைமையைக் கருதி, அவர்களுடைய அடிப்படைச் சம்பளத்தை மாற்றி அமைக்கவோ அல்லது விசேஷ மான்யம் வழங்குவதற்கோ அரசாங்கத்திற்கு உத்தேசம் உண்டா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அம்மாதிரி உத்தேசம் இப்பொழுது இல்லை என்றுதான் சொன்னேன்.

Grant to Municipal High Schools

* 183 *Q.*—SRI V. SANKARAN : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether there is any proposal before the Government to increase its annual grant to Municipal High Schools in the State; and